1297

1277

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சொரூபஞானதேசிகரால

அருளிச்செய்யப்பட்ட

# சொரூபசாரம்.

...த்தப் [illegible] பதிப்பு.

டாக்டர்

உ. வே. [illegible] நூல் நிலையம்

அடையாறு, சென்னை-20.

சென்னை:

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

இதன்விலை அணா-௧.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

# சொரூபசாரம்.

## ஆத்மஸ்வரூபவணக்கம்.

சிற்சொரூபந்தானேசகசொரூபமானவெலாந்
தற்சொரூபசாரமாச்சாற்றவே-பொற்சொரூப
மச்சுருவாம்போலவதுவதுவாய்த்தோற்றுமொரு
சொச்சொரூபந்தானே துணை. (௧)

## நூல்.

{ சுசாதிவிசாதி சுகதபேதமின்மையின், அனைத்துஞ்சித்தேயெனவஸ்துநிச்சயங்கூறல். }

பூதாதியைந்துபொறிபுலன்களெல்லாஞ்சித்
தேதாதியந்தமவையெல்லாஞ்சித்-தோதரிய
கற்பனையுஞ்சித்தனைத்துங்காண்பானுங்காட்சியுஞ்சித்
தற்பமும்வேறில்லாமையால். (௨)

இங்ஙனமனைத்துஞ் சித்தென்பதற்கு உத்தியுளதோவெனில், உளதெனக்கூறல்.

புத்திவிகற்பத்தாற்பொருந்துசகபேதமெலாஞ்
சத்தியம்போற்றோன்றுவதுசாட்சியன்றோ-முத்திமு
சுத்தமசுத்தஞ்சுகாசுகங்களுள்ளதில் [தற்
தத்தனையுஞ்சத்தாதலால். (௩)

*அங்ஙனமனைத்துஞ்சத்தாலால், அவைகள் சச்சிதானந்த மாகியதனதுசொரூபமாகத்தோற்றுகின்றன வாவெனில், அவ்வாறே தோற்றுகின் றனவெனக்கூறல்.*

பார்த்ததிசையெல்லாம்பரிபூரணசொரூபந்
தீர்த்தமெல்லாமானந்தசிற்சொரூபங்-கீர்த்திக்குந்
தோத்திரங்களெல்லாஞ்சுகசொரூபநம்மையல்லால்
வேற்றுருவமேதாகுமே. (௪)

*இக்கூற்றுவசனமாத்திரமா அனுபவமுண்டா வெனில், அனுபவமுண்டெனல்.*

அய்யாசகத்தோற்றமாதாரமெல்லாநீ
பொய்யாதுசோதியெனப்போதித்தான்-மெய்யாக
வுற்றுணரினென்றுரையாரொருவரில்லை
முற்றுணர்வானானேமுதல். (௫)

*இவ்வனுபவமாகத் தன்னைத்தரிசித்ததெது, அஃதெப்போதுதித்ததெனில், இவ்வனு பவமென்றுமுளதெனவுந்தானே தரிசித்தவனெனவுங்கூறல்.*

நம்மையறிவேவடிவாநாங்கண்டோநம்மையன்றிச்
செம்மையுலகத்திலொன்றுண்டோ-நம்மைநா
மூற்றுப்பாராதிருந்தோமல்லாலொருகாலு
மிற்றுப்போனோமோவியாம். (௬)

தானேயனைத்துமாயின்,நாமம்பலவாவானேனெனில்,
அதனாற்றான்வேறாகா வெனக்கூறல்.

எல்லாருநானாவிருந்துரைப்பாராகிடமை
யல்லாமலீசனளவுமலர்-சொல்லாலே
பெற்றமகன்றம்பிப்பிதாப்பேருரைத்தொருவற்
குற்றவுடல்வேறாகுமோ. (௭)

அங்ஙனமாயின்,அறிபவனு மறிபொருளும்வே
றாமேயெனில்,ஆகாவெனக்கூறல்.

நாமாயிருந்தோமுநாமேநாமல்லவாய்ப்
போமாறுபோகும்பொருளுநாம்-யாமத்துத்
தானேயுறங்கிச்சகத்துருவாய்த்தோற்றிவிழித்
தானேயவன்போலத்தான். (௮)

இங்ஙன மனைத்துமாய் விளங்கிய வாத்மாவின்
சுபாவஸ்வரூபம் யாதெனில், தானே
தானாய்விளங்குதலெனக்கூறல்.

ஆகமாயாருயிராயஞ்ஞானமாய்ஞானப்
போகமாயின்பப்பொருளாகி-யேகமாஞ்
சிற்சொரூபமாகியெல்லாச்செய்கையுமாநம்முடைய
கற்சொரூபமேதான தால். (௯)

இங்ஙனந்தானாகவிளங்கிய வாத்மாவிற் கொருண்மை
நாமங்கூறக்கூடுமோவெனில்,அஃதநீதானுபவ
மாதலிற்கூறக்கூடாதெனக்கூறல்.

ஆனந்தமென்பாரதீதமென்பார்நான்மறைக்குந்
தானந்தமாஞ்சருவசாட்சியென்பார்-ஞானநூல்

சொன்னகுறியெல்லாந்தொடாதவென்வடிவுக்
கென்னகுறிசொல்லுவேன்யான். (௧௦)

இங்ஙனமறிந்தமாயின் விசாரணைக்கிடமின்மையின்
அதற்கோரடையாளங்கூறல்வேண்டுமெனில்,
எல்லாமாயல்லவுமாயிருத்தலின் நிர்
வசனமாமெனக்கூறல்.

நானேயதுவோவதுநானேநானதுவோ
ஞானேயமோநாதாந்தமோ-மோனமோ
சுத்தமோசூனியமோ தோற்றுஞ்சுபாவநிலை
யித்தனையுமல்லவாமே. (௧௧)

இங்ஙனமனிர்வசனமாகக்கூறின், ஆத்மாவையறிப
வருமிலதாம்; அந்தஞானம் பரிபாலனமுமாகா
தாம்; ஆதலினதற்கோர் நாமங்கூறல்வேண்டு
மெனில், சுருதிகளியம்பிந்த நாமங்
களைக்கூறல்.

புத்தோகமுத்தோகம்பூரணானந்தோகஞ்
சத்தோகஞ்சித்தோகஞ்சாந்தோகஞ்-சுத்தோக
மாரணங்கடேடரியவற்புதோகஞ்சகல
காரணமாஞ்சைதன்யோகம். (௧௨)

இந்நாமங்களனுபவமாமோவெனில், அனு
பவமுமாயாதீதமுமாமெனக்கூறல்.

சொல்லாச்சுவானுபவாதீதச்சுகானந்த
மெல்லாமுநானாயிருந்தோமே-தொல்லைவினை

யற்றோமெனச்சொலவுமற்றோமேநம்மைநாம்
பெற்றோம்பிறைமுத்தோம்பினாய். (௧௩)

இவ்வனுபவத்திறப்பயன் யாதெனின்,
முத்தியுலகிற்கரசராதுமெனக்கூறல்.

சந்ததமுநீங்காத்தனியரசாகப்பெற்றோமே
தொந்தச்சுகாசுகமுஞ்சுட்டோமே-சிந்தனையை
வாட்டியதேகாதிவனவாசம்விட்டோமே
வீட்டிற்குடிபுகுந்தோமே. (௧௪)

இவ்வரசன்றன்னரசிலெந்நவிறைதம்
பார்த்திருப்பானெனவில், அவற்றாந்
திரியாடனங்களையெனக்கூறல்.

கனவிற்றசேந்திரியநாட்டியங்கள்பார்ப்போங்
கனவின்மனக்கூத்துங்காண்போம்-நினைவிற்
சுழுத்தியிலேயில்லாதகுணியக்கூத்தாடி
விழுப்பொருளாய்நாமிருப்போமே. (௧௫)

சுகதுக்கங்களைநானென்றிருந்தபோதிவ்வனுபவ
மெய்க்கேயெனில், அப்போது நானாயிருந்ததே
யன்றி வேறொன்றின்றெனக்கூறல்.

நானென்றிருந்தவனைநான்கண்டேனிலவ
னானென்றுருத்தரிக்கவொட்டேனே-ஞான
வடிவானநானேநான்மற்றுள்ளநானெல்லாம்
மடிவானிறந்துபிறப்பான். (௧௬)

# சொரூபசாரம்.

நிர்விகாரியானவிவ்வாத்மா விவகரிக்கிற் பந்தப்படாதோவெனில், சூரியனைப்போலச் சாட்சியாயிருந்தலிற்படாதெனக்கூறல்.

சாயையெனவாழ்குடும்பந்தன்னைச்சுமந்தாலு
மாயையெனுமேகமறைந்தாலும் - தூயவொளி
தானாய்விளங்கிச்சகசாட்சியாயிருக்கு
ஞானாதித்தன்றானேநாம். (க௭)

ஆதித்தனைப்போல விவன்றொழிற்படாமலிருக்க வில்லையேயெனில், இவனுந் தொழிற் படாமலிருக்கின்றானெனக்கூறல்.

ஏதேதுவந்தாலுமேதேதுசெய்தாலு
மேதேதிலின்புற்றிருந்தாலும் - யேதேதுந்
தானாகாவண்ணந்தனியேதெரிந்திருக்கு
ஞானாகாரந்தானேநாம். (க௮)

ஆத்மாவசைப்பிக்கச்சகலமுமசைதலின், அதற்கும் பந்தமுளதேயெனில், பம்பரமாட்டுஞ்சாட்டியைப்போலதற்கும்பந்தமின்றெனக்கூறல்.

ஆட்டிவிட்டபம்பரம்போலாசைமுதலிக்கரணங்
கூட்டிமுடித்தாலுங்கூடோமே - சாட்டியதிற்
சம்பந்தமற்றோமேதற்சொருபமானோமே
யெம்பந்தம்போனவாறே. (க௯)

ஆனவஞ்ஞானநீங்கிஞானம்வர்தவழியாதெ
னில், சுவானுபவத்திநிற்றுதல்வருதல்
காரணமெனக்கூறல்.

அஞ்ஞானமெத்தாலழிந்ததோவாராயும்
விஞ்ஞானமெத்தால்விளைந்ததோ-மெய்ஞ்ஞானச்
செம்மையனுபூதித்தெளிவுபெற்றதெய்வமே
வெம்மையல்லாவேறுகளை [redacted]. (௨௦)

ஞானம்வருதலுமஞ்ஞானம்[redacted]ரியாவிடின், அறி
ஞனென்பதெங்ஙனங்கூடு[redacted]காளவுகூறல்
வேண்டுமெனின், மெய்[redacted]ய்போலவறி
விலறியாமைநீங்கி, அ[redacted]டுமொழியு
மாகாதுமிருப்பதே யறிஞனியல்
பெனக்கூறல்

மெய்யெல்லாநாமாய்விளங்கியபின்னுமான
பொய்யெல்லாமெங்கேனும்போனதோ-மெய்பொய்
யிருவகைக்குநாமேயிடமானோந்தொந்தித்
திருவகைக்குமெட்டாமலே. (௨௧)

முன் தேகநானெனவுந்தேகநானன்றெனவுங்கூறி;
இப்போதுதேகத்திற்குவேறுபட்டும் படாம
லுமிருப்பனெனவுங்கூறின் உண்மையா
தெனின், மாவித்தின் பருப்பைப்
போலக்கூடியுங் கூடாமலு
மிருத்தலே யுண்மை
எனக்கூறல்.

தேகநாமென்றுமேசெல்வநமதென்றுமே
போகநாமென்றுமேபொய்யன்றே-யாகமுதல்

நாமாயிருந்தது மெய்ந்நாமசங்கமானது மெய்
தேமாவித் தேபோற்றினம். (உஉ)

இப்படிப்பற்றியும்பற்று இருத்தல்அஞ்ஞானதசையின்
மாத்திரமா ஞானதசையிலுமோவெனில்,
இவ்விரண்டுதசையிலுமேயெனக்
கூறல்

வாலமதியு நமதி[illegible] னவஞ்ஞானக்
காலமுநாங்கண்[illegible]மே-சீலமா
மப்போது நம்மி[illegible]மான வெலா
மிப்போது மெய்ய[illegible]வ. (உ௩)

இவ்வுருவம் [illegible] திருமேனியுள்ள அஞ்ஞான
தசையிற் சகளனமானதா வெண்டோவெனில்,
அதைக்கண்டதுதான் யாதலின்றெனக்கூறல்.

பொய்ந்நானையின்பப் பெருநாயபராமரையின்
மெய்யாய்க் கைப்போல்விளைத்தக்கா-லையோநா
மெங்கேயிருந்தோமெனத்தெய்வமாய்த்தொழுதோ
மெங்கேயடைந்தோமியாம். (உ௪)

இவ்வுருவ முதிப்பதற்கு முன்னுத்மா வெப்படி
யிருந்ததெனில், தத்தரிசனம்பெற்று நாமுய்ந்த
விடத்திதனையறியேலாமெனக்கூறல்.

ஆராகியோவிருந்தோ மார்க்கோவிறைக்குழைந்தோ
மோராயிரமாகவேபதித்தோம்-பூரையினி [ம்
நம்மாலேவேடரியநம்மைநாங் கண்டோமே
யம்மாபிழைத்தோமடா. (உ௫)

தம்மைத்தரிசிக்கிற்பெறுவதுமுறுவதும்யாதெ
னின், மனதம்பிற்கலைதலும், அனேந்துமான
தாமேசச்சிதாநந்தமாதலுமெனக்கூறல்.

கள்ளமனத்தைக்களைந்துருகப்பெற்றேமே
யுள்ளபடிநம்மையுணர்ந்தோமே-தெள்ளமுதச்
சச்சிதாநந்தமுநாந்தாமாயிருந்தோமே
யச்செல்லாநாமாகையால். (௨௬)

ஆத்மாவேறாகத்தெனப்படுபசாரமன்றியுண்
மையாகாதெனில்,கண்ணைத்தவிரக்காட்சிவே
றின்மைபோல,ஆத்மாவைத்தவிரச்சகத்து
வேறன்றென்பதுண்மையெனக்கூறல்.

கண்ணாற் காட்சியுண்டோ காதலாற் கேட்ப
துண்டோ, விண்ணலாலே நாம் விரிந்ததுண்டோ-
வெண்ணுங்காற், கானலாற்றுவேறாக் கண்டதுபோற்
றெற்றுமினுந், தானலாதுண்டோசகம். (௨௭)

காண்பானுங்காட்சியும்வேறாகக்காணப்படுகின்
றனவேயெனில்,பொன்னேயாபரணமாகப்
பார்ப்பதுபோலன்றிவேறின்
றெனக்கூறல்.

என்னைத்தவிர மற்றிங்கேதுமில்லை யென்று
ணைப், பொன்னைத்தவிர விலா[redacted]ம்போற்-
பொன்னையுரு, வேறாக்கிப் பேருமை[redacted]வற்றுமை
போனம்மையுமவ்,வாறாகப்பதுத்துரைத்தோமால்.()
மகையலைப்பா
காரிகாகையா

இவ்வனுபவமேதன்மைத்தெனில், நினைவைக்
கரைத்தே ஜாக்கிராதீதமாய், அனைத்து
நாமாய்விளங்குமெனக்கூறல்.

வாக்கிறந்துபெட்டாமனத்திறந்துபெட்டாது
தேக்கிட்டாலுந்தெவிட்டாத்தெள்ளமிர்த - நாக்கினீ
ரூறல்போலெப்போதுமூறியுமக்குடம்போல்
வேறறநாமாயிருந்தோமே. (௨௯)

அனைத்துஞ்சிவமாயிருக்கவதுவாக வேண்டுமென்
பதேதெனில், ஏகமிரண்டென்னும்பேதநீங்
கிப்பூரணஞானமாய்நிற்கெனக்கூறல்.

ஏதுசிவானந்தமோவேதுசிவாகாரமோ
வேதுசிவன்செயலோவென்றதே - யேதும்
பிரிவாகாவொன்றாகாப்பேதமாகாத
வறிவாநிறைவேயது. (௩௦)

அசத்தெனத்தள்ளுதல்யாது, சத்தெனக்கொள்ளு
தல்யாதெனில், அறிபொருளையசத்தெனநீக்கி,
அறிவைச்சத்தெனக்கொள்ளுதல்
சாந்தமாமெனக்கூறல்.

தானற[illegible]வங்களெல்லாந்தனக்கனியர்
தானது[illegible]ன்று தள்ளுங்கான் - ஞானமாய்த்
தள்ளுமவ[illegible]குந்தன்னைத்தானென்றுணர்ந்து
கொள்ளுமதுசாந்தமாகும். (௩௧)

சாந்தமேபொருளாயின் சாட்சியென்பதேதெனில்,
அதுவேசாட்சிமுத்தர்களாலநுபவானந்தமாய்ச்
சித்தநிலையானசிவமாமெனக்கூறல்.

சாந்தமேதற்சாட்சிதற்சாட்சியேபிரமம்
போந்தபிரமமேபூரணமா-மாய்ந்துணர்ந்த
சுத்தபரிபூரணமேதான்முத்தர்களானுபவமாஞ்
சித்தநிலைதானேசிவம். (௩௨)

சித்தமடங்கினாலும் மாயைநசித்தன்றோசாயுச்சிய
மாகல்வேண்டுமெனின். சித்தநாசமேமாயாநாச
மாதலின் அதுவேசாயுச்சியமாமெனக்கூறல்.

சித்தம்பிறந்துசெகம்பிறந்ததாமெனவோர்
கத்தன்பிரிந்தவழிகண்டோமே-சித்த
மடங்காலையேமாயையம்மாயையமாய்ப்பார்
இடந்தானேசாயுச்சியம். (௩௩)

இதுவேசாயுச்சியமானால் முன்செய்தகன்மமெங்
கேபோமெனின், இவ்வனுபவத்திற்
போனவிடந்தெரியாமற்போமெனக்கூறல்.

எல்லையற்றசென்மமெடுத்தோமிறந்தோமென்
றல்லலுற்றபீதியழிந்தோமே-தொல்லுலக
மெல்லாங்கடுவெளியாமென்வடிவாமென்றன்வடி
வல்லாதுபொய்யாதலால். (௩௪)

இப்படிப்பட்டவனுபவமிருக்கக்கன்மஞ்செய்வா
னேனெனின், இவ்வனுபவ முதிராத
போததனைச்செய்வதெனக்கூறல்.

காலங்கருதிக்கடவுளரைக்கைகூப்பிச்
சாலவிரதங்களெல்லாஞ்சாதித்தே-மேலுணர்வா
லீதெல்லாநாமென்றெண்ணியனந்தானந்த
போதநாமாகாதபோது. (௧௫)

இவ்வனுபவம்யாவர்க்குறுமெனின், நித்தியமுதலிய
வற்றைப்பெற்றுச்சுத்தரானவர்க்குறு
மெனக்கூறல்.

நித்தியமாயேகமாய்நின்மலமாய்ப்பூரணமாய்ச்
சத்தியமாயென்றுமிருந்தபோதத்தே-சுத்தராய்ச்
சித்தநிலைபெற்றவராய்த்தீர்ந்தசெனனத்தவரா
யுத்தமராயுள்ளார்க்குறும். (௧௬)

இச்சுத்தர்க்கடையாளம்யாதெனி
னிஃதெனக்கூறல்.

வெட்டெனவும்பேசார்வெகுளார்முகங்கோணா
விட்டபதார்த்தம்பெரியோர்க்கேற்றுவைப்பார் - துட்
டர்களைச் - சேராரியாவர்க்குந் தீங்குரையார் கன்ன
லிழுக்கு, பாரார்பிறவிதீர்ப்பார். (௧௭)

(உதாரணம்.)

பொன்னும்பொருளைப்பொருளாகவும்போற்று
றென்றுநலந்தீங்கெடுத்துரையார்-சென்றசில

…சென்னை - 600020

காரியத்தைநோக்கிக்கழியாரிழிவுசெய்யா
ராரியரேதாமாகுவார். (௩௮)

(இ-ள்.)

வேதவிதியைவெறுத்துரையாருள்ளவு
மோதலுருகவொழிக்கிறார் - சாதன்
மறவார்கருத்திளகியன்னுலகில்வாஞ்சை
பிறவார்பிறவாதபேர். (௩௯)

(இ-ள்.)

சித்தசலனந்திடுக்கெனவுஞ்சற்றுமுறார்
முத்திவழிகேட்கவேமோகிப்பார் - புத்திபோய்
மாடுமனைவீடுமனைமக்கள்செல்வமாச்சரியங்
கூடியழுந்தார்பக்குவர். (௪௰)

(இ-ள்.)

ஆர்க்குவருவிருந்தென்றுவணவும்போவனவுந்
தீர்க்கநிலையன்றென்றுதெளிவரே - பார்க்குங்கால்
சாந்தராய்நித்தியராய்த்தத்துவபோதத்தவராய்த்
தீர்க்கநிலைநின்றுசிலர். (௪௧)

(இ-ள்.)

சங்கற்பசாலச்சகத்தோற்றமவையெலா
மிங்கற்பமென்றிகழ்வரே - பங்கமற
வின்மைமறுமையிரண்டிடத்துமப்பாலுந்
தம்மையன்றிக்காணாதவர். (௪௨)

இவர்களுக்குச்சாஸ்திர வாசனையாவது அறிவறியாமை
வாசனையாவதுமறந்தும் வாராதோவெனின், அஃதுமோர்
வாசனையாதலின் வாராதெனக்கூறல்.

சத்தப்பிராந்திசகசத்ராம்ப்ராந்தியெலாஞ்
சித்தப்பிராந்தியென்றேதேறுவார்-முத்தர்தா
மாரோபமாகுமவத்தைதொறுந்தோற்றியழி
யாரோபம்பொய்யாதலால். (சரு)

இங்ஙனமாயினிவர்க்கோர் தேவாராதனை
யாதெனில். தேகியைத் தரிசித்தலே
யெனக்கூறல்.

தேகாலயத்திற்சிதாகாசதேவதையை
வாகாயசாந்திமலராலே-யேகாந்த
மந்திரத்தாற்பூசைசெய்யாதவரையாதரித்துச்
சந்ததம்வாழ்வார்க்கார்சரி. (சசு)

ஆனல்யாவருமிங்ஙனமேன் செய்யவில்லை
யெனில், அறியாமையாலெனக்கூறல்.

முக்கனியும்பாற்சோறுமுன்பிருக்கநாயருந்திக்
கக்கியசோற்றைக்கருதுவா-ரெக்கலைக்கு
மெல்லாப்பொருட்குமிருப்பொருள்யாமென்றுமல்
வல்லார்க்கடிமைபுகுவார். (சஎ)

மற்றான்களை அவமதிப்பார் என்னகதி
யடைவாரென்பது.

செம்மையறியார்செகத்தோற்றரவறியார்
தம்மையறியார்வினையுந்தாழ்வறியார்-தம்மிலே

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய
சென்னை - 600090.


யந்தராய்வீணேயவமதிப்பார்நல்லோரை
யெந்தவழிபோவாரிவர். (சசு)

பேரின்பத்தைச்சொல்லும் ஞானசாஸ்திர
மன்றியேனைய நூலுண்மையாகா
தோவெனில், ஆகாதெனக் கூறல்.

ஐங்கணையும் பூவாமறுகாலனிநாணு
மென்கரும்பாம்வில்லனங்கன்வீரனும்-வன்காத
லேற்றுவனுமெல்லாம்பொய்ப்பிப்படியேபாழுலகத்
தோற்றமெலாமெய்தானுசொல். (சஎ)

ஆறைற் காலமுதலியவை பொய்யோவெனில்,
ஒன்றிலுஞ் சார்பில்லாதவிவர்க்குப்
பொய்யே யாமெனக்கூறல்.

காலமோதேவதையோகன்மமோமாமாயைச்
சீலமோவிம்மனத்தின்செய்கையோ-கோலியநல்
லுச்சாகமோநலந்தீங்குத்தரிப்பதேததிலே
யெச்சார்புமில்லாவிவர்க்கு. (சஅ)

அவைகள் சரீரத்தைக் குறித்தாவது
வேண்டாவோவெனில், சரீரமன்னியமா
தலின்வேண்டா வெனக்கூறல்.

தன்னைத்தான்றேடாச்சதிகாரரேன்பிறந்தா
ரன்னைத்தால்வந்தவுடலார்தாமார்-முன்னம்
விடுத்தவுடலெத்தனையோமீண்டுமீண்டின்பா
லெடுத்தவுடனூறுயிரம். (சகூ)

ஆனல்யாவருமாபாசர் கடாதேனவெனின்,
ஆசிரிய ரறிவிக்காதவிடத் தறிவின்மை
யின், ஆபாசரே யாமெனக்கூறல்.

பொய்யாக்கப் பொய்மைப் பொருளைப் பொருளாக்க
மெய்யாக்குருவொருத்தன் வேண்டிற் றேடையயகோ
பூபாலராகிப் பொலிந்திடுசீவன்களெல்லா
மாபாசரென்பதுவேயாம். (௫0)

இவர்களையாபாசரென்றால், ஏகமானப்பிரமம்
இங்ஙனம்பேதமாகத் தோற்றுவானேனெனின்,
ஒன்றாகப் பாராதவர்க்கிப்படித் தோற்று
கின்றதெனக்கூறல்.

ஒன்றிலே தோற்றுமுலகப்பிரதிவிம்ப
மொன்றும்போற் றோற்றுதவுண்மையென்றே - வென்
பொருளாகப் பாராதபுன்மையறிவோர்க்கே [றும்
மருளார்பொறிபோலவாம். (௫௧)

இங்ஙனமொன்றாயிருக்கவதைத் தரிசியாததற்குக்
காரணம்யாதெனில், தானுயிருக்கின்றதன்னைக்
காணுமைக்கேதுயாதறிகிலோமெனக்கூறல்.

தன்னையறியாமற்றனேதனைத்தேட
லென்னபுதுமையிதையென்சொல்வேன் - மன்னுல
றன்னீரினின்றுகொண்டேதாகந்தணியார்போ [கிற்
லென்னீர்மற்றதைப்போய்யாம். (௫௨)

தன்னைத்தரிசிக்குமார்க்கம் யாதெனில், சாஸ்திர
விசாரத்தின்சாரமான தன்னில் அசைவறச்சும்
மாயிருத்தலே யாமெனக்கூறல்.

சாத்திரங்கள்கத்தித்தலைவீங்குவீர்குலமும்
கோத்திரமுங்கொண்டுவினைகூட்டுவீர்-சாத்திகரா
யும்மாலேயும்மையுணர்ந்தோயாத்தொழில்விட்டுச்
சும்மாவிருக்கொணாதோ. (ருக)

ஆனாற்றேவபக்திஞானமாமாவெனில், பக்திசெய்பவ
னன்றிப்பக்தியாகாதெனக்கூறல்.

ஆசித்துத்தெய்வத்தடையாளமுங்கொளுத்திப்
பூசித்துக்கைகூப்பிப்போற்றுவீர்-நேசிக்குந்
தானேவதுவோசதிரானதெய்வமென்ன
ஊனேடுழல்வாருரார். (ருஉ)

ஆனாற்றோர் திருவிழாவைத் தரிசிக்கவேண்டாவோ
வெனில், அவற்றைத் தரிசிப்பவனைத்
தரிசிக்க வேண்டுமெனக்கூறல்.

தேரைத்திருநாளைச்சேவிப்பார்தம்மைவிட்டங்
காரைத்தொழப்போராரையகோ-தேரிடையே
பார்க்கின்றதெய்வம்பரிபூரணமலவோ
யார்க்குந்தெரியாததோ. (ருங)

ஆனால் யோகநன்றோவெனில், அறிவையறிதற் கதுவேண்டுவதின்றெனக்கூறல்.

மூலக்குளையிருந் தாமூச்சடக்கிப்பேச்சடக்கிச்
சாலக்கண யோகஞ்சாதிப்பார்-மேலுணர்வு
கண்டிருக்கச்சாதனையே யன்றாயக்கதையே வலித்திங்
காண்டிருக்க வெண்ணுகிறீரோ. (௫௬)

ஆனாற் றுறவுநன்றோவெனில், அகம்பாவநீங்குவார்க்
குள்ள தகத்துறவின்றுதலால் எங்ஙன
னென்றுமெனக்கூறல்.

கட்டப்படாமற்காயாத்திரைத்திரிப்பார்
பட்டித்தொருகோவணமாவார்-சிட்டர்போற்
றூங்காமற்றூங்குஞ்சுகம்பெறுவாரே
யாங்காரநீங்குவாரானால். (௫௭)

ஆனாற் சாஸ்திரமுஞ் சாதனமும் வேண்டாமோவெனில்,
அவற்றின் சாரமான தன்னைத்தெரிந்தவர்க்
கவைவேண்டா வெனக்கூறல்.

எச்சாத்திரம்வேண்டுமெச்சாதனைவேண்டும்
பிச்சாட்டல்லோடுவாய்ப்பேதையர்க்குப்-புச்சாண்
காட்டுவார்போலவறுங்கற்பனையேகாட்டி [டி
காட்டுவார்தம்மைக்காணார். (௫௮)

தன்னையறிவதற்குச் சாதனம் வேண்டாமோவெனின்,
சாதிப்பவனைக் காணுதசாதனம்
யாதுக்கெனக்கூறல்.

ஆண்பெண்ணலியென்றனைத்துவிதமாகக்
காண்பனவெல்லாங்காண்பதுவு - மாண்டவுட
லிற்றினைத் தோற்றமல்லாலுண்டோவில்லை தெரியா
தொருத்தனைசாதிக்காலுமென். (௨௯)

இவ்வணம் விசாரித்தறிவதேவ்வா றிருத்தலின்றாக
வெனின், விசாரித்தொன்றென்றறிந்த
படியத்துவைவமாகாமையால் இருந்த
நின்றதென்றனக்கூறல்.

அவ்வாறிறவாதிருக்கிறவெவ்வாறேவர்போடையென்
றெவ்வாறுகட்டிடுற்றனிலைமையேர்ந்ததே - யெவ்விதமு
நீங்குவார்நீங்காதிலையிலனுபூதிகண்டு
தூங்குவார்க்கன்றேசுகம். (௩0)

அத்துவிதலக்கணம் தெரிதல்வேண்டாமோ
வெனின், அத்துவிதமேசிவமாதலின் அதுவேண்டா
மெனக்கூறல்.

வின்னுருவம்சிவனென்பார்வேற்றுருவஞ்சிவனென்
பார், தன்னுயிரவியும்போற்காணென்பார் - இன்னை
மதா, யத்துவிதமாகாதவை யிரண்டுமாகாத, சித்
துருவந்தானேசிவம். (௩௧)

ஆனாற் சிவத்தையடையும் வழிதானியாதெனில், அனைத்து
மாயையெனத்தள்ளித் தன்னைத்தரிசிப்பதே
யாமெனக் கூறல்.

சுத்தனுடமானசுக்கிலங்கொர்ப்பிகரித்துச்
சித்தத்துவங்கலந்து ஜீவித்துச்சத்தியம்போல்
வந்தபொருதிதல்லாமாயையென்றேதற்சொரூபஞ்
சிந்தைசெய்வாரன்றேசிவம். (௩௨)

ஆனால் திரிகாலங்களையுமுணர்ந்தவர் சிவமாகாரோ
வெனில், காலாதீதமானதன்னைத் தரிசிப்பவரே
சிவமாவரன்றி, அவர்களாகாரெனக்கூறல்.

நேற்றின்றுநாளையெனச்சத்தராப்பகலை
மாற்றிச்சுயஞ்சோதிவடிவாகி-யேற்றபடி
யென்றுமொருநாளாயிருக்குந்திருநாளைச்
சென்றுதெரிவாரேசிவம். (௩௩)

ஞானநூல்முதலியவற்றைக் கைவிடல் நிர்வாணசுகமடைவ
தெங்ஙனமெனின், உபசாந்தியுண்டாய்த் தன்னிற்
கலைபின்றிச்சுகிப்பதே முத்தியாதலின்
அவைகளாற் பயன்யாதெனக்கூறல்.

ஞானநூல்கற்றலுந்துறவுபூண்டாலு
மோனசமாதிமுயன்றலும்-தானாகி
யெல்லாக்கலையுமற்றின்புற்றிருப்பதுவே
சொல்லாருமுத்திச்சுகம் (௩௪)

(இதுவுமது.)

மாகேள்விபெற்றாலுமாயோகமுற்றாலுங்
தேகேந்திரியந்திரிந்தாலு-மாகநுணைச்
சொரூபசாரந்திதேறார்பெறார்பேறு
சோராதமுத்திச் சுகம். (௬௫)

அங்ஙனமாயின், பிராரத்வமாயினு மனுசரிக்க
வேண்டாமோ வெனில், காற்றாடிகாலைப்
போலத்தானசைவின்றிநிற்கின் அஃது தானே
சுழன்று நீங்குமெனக்கூறல்.

இச்சையநிச்சைபரவிச்சைபோடுமூனும்
கொச்சைப்பிராரத்வக்கூழ்காண்-பிச்சைமுத
லேற்றாரிடுவாரிவரென்றுணர்ந்தீரேற்
காற்றாடிக்காலாகலாம். (௬௬)

ஆனாலிவ்வனுபவம் யாவர்க்கும் வராதோ
வெனில், பகிர்முகமின்றி யகமுகமாயின்
யாவர்க்கும் வருமெனக்கூறல்.

என்னைநான்கண்டபடியிப்புவியிலெல்லோரும்
தன்னையேகாணத்தகுங்காணுஞ்-சொன்னே
னொளிநாட்டமோடுமனமுன்னோட்டம்பெற்று
வெளிநாட்டமாகாவிடின். (௬௭)

ஆனால் ஞானவான்களுக் கொரு கன்மமும்
வேண்டாமோ வெனில், செய்பவனையுஞ்
செயலையுங்கண்டு கொண்டிருத்தலால் அவர்க்கது
வேண்டுவதின்றெனக்கூறல்.

கன்மந்தவருமற்காலந்தவருமற்
சென்மந்தவருமற்செய்வரோ-கன்மவிதி
செய்வான்செயலிரண்டுஞ்சித்தத்தேகண்டுதெளிந்
துய்வார்பொருளாகுவார். (௬௮)

ஞானிகள் கன்மிகளைக் காணின் வெறுப்பரோவெனின்,
இந்திரஜாலத்தைக் காண்போ ரதனைப்
பொய்யெனக்கண்டு மகிழ்வதுபோல
மகிழ்வரேயன்றி, வெறுக்காரெனக்கூறல்.

உள்ளபடிகண்டுகளித்துற்றுருகமாட்டாத
கள்ளரையுங்கண்டுகளிப்பரே-கொள்ளையா
மிந்திரஜாலக்கமலமெத்தனைபுட்பித்தாலுஞ்
சந்திரனுக்குண்டோசலம். (௬௯)

இவ்வனுபவம்வந்த தெங்ஙனமெனில்,
ஆசிரியரருளினா லிவ்வனுபவந் தெய்வீக
மாய்க்கிடைத்ததெனக்கூறல்.

தீங்கடர்ந்துமேன்மேற்செனித்தகருவேலடியின்
மாங்கனிவந்துற்றதொப்பவாய்த்ததே-ஆங்காங்கு

மெல்லாருந்தேடுபொருள்யாமாகவேயருள
வல்லான்றிருத்தாண்மலர். (எ०)

ஆனுலிவ் வனுபவங் கிடைப்பதித்தனை
யருமையோ வெனின், மிகவு மருமை
யாமெனக் கூறல்.

நானிருந்ததெங்கேநானபிமானித்ததெங்கே
வானுளமண்ணுளவாஞ்சையெங்கே-ஞானகுரு
தேசிகனெங்கேசிவசிவாமூர்த்தியெங்கே
பேசிடவாயெங்கேபிளாய். (எக)

இவ்வனுபவத்தாற் பெற்றபேறு யாதெனில்,
சிந்தனைதீர்மான தன்னைப்பெறுதலே
யெனக்கூறல்

என்னையேயல்லாமல்யான்பெற்றதேதுமில்லை [றிப்
யென்னையான் பெற்றிருந்ததெப்போது-மென்னையன்
பந்தமில்லைவீடுமில்லைபார்க்கிலிவையாராயுஞ்
சிந்தனையுமில்லாததே. (எஉ)

இவ்வவசரத்தில் யாரைத்துதிக்க வேண்டுமெனில்,
தன்மயமாக வாசிரியர் முதலிய
மூன்றினையுந் துதிக்கவேண்டு
மெனக்கூறல்.

செப்படிபோற்காட்டியருடேசிகனையோவனைத்து
மிப்படிசோதித்துணர்ந்தவென்னையோ-மைப்படியுஞ்

சென்மமுடிவாகவந்ததேகாலயத்தினையோ
வென்மயமாய்ப்போற்றுவேன்யான். (எங)

ஸ்தூலதேக வாசனையைத் தள்ளுவதெங்ஙனமெனில்,
அன்னமயமெனக் கண்டதனைத்தள்ளல்
வேண்டுமெனக்கூறல்.

அன்னமயகோசமாமாகமேயுள்ளளவு
சொன்னபடிகேட்கிற்சுகமடைவா-யென்றனை
கெட்டபாழ்வாசனையைக்கிட்டாதேயாதேனு
மிட்டபடிகண்டேயிரு. (எச)

இந்திரியங்களைக் களைவதெங்ஙனமெனில்,
அவற்றைத் தன்மயமாகக்கண்டுகளைய
வேண்டுமெனக் கூறல்.

பொறிகாளெனைநெடுநாட்போற்றிவளர்த்தீரே
யறிவானந்தப்பொருளானேன்-பிறிவாகு
மூங்களையுநானுவுணர்ந்துகொண்டேனீங்களினி
யிங்கழியாதொன்றாயிரீர். (எரு)

ஆசையைநீக்குதலெங்ஙன மெனில்,
தற்றரிசனவிச்சையால் நீக்கவேண்டு
மெனக்கூறல்.

ஆசையேயுன்றலைந்துவிட்டேனென்றாலு
நீசெயுபகாரத்தினின்றேனே-தேசிகனை

யுன்றாலடைந்தேனுனைக்கூடிமுத்தியினு
மென்றனைநானாயினேன். (௭௬)

கோபத்தைக் கெடுத்த லெங்ஙனமெனின்,
உபசாந்தத்தா லெனக்கூறல்.

கோபமேயுன்றற்குறைதீர்ந்தேனீயெழும்பித்
தாபமேசெய்யுஞ்சலிப்பாலே-யாபத்து
நீங்கியுபசாந்தியிலேநின்றேன்கனவினுநீ
யேங்கியெழும்பாதேயிரு. (௭௭)

உலோபத்தைப் போக்குவ தெங்ஙனமெனில்,
தன்னிலமைந்திருத்தலா
லெனக்கூறல்.

லோபமேயுன்னையுறவுகொண்டேனுன்னுருவம்
பாவமேயென்பருண்மைபற்றுவார்-நீபெருக
வார்ச்சிக்கவேபடுவாயாபாவியுன்னாலே
யார்ச்சிக்கப்பட்டேனமைவு. (௭௮)

மனதைக்கரைப்பதெங்ஙனமெனின்,அதற்காதா
ரமானவாத்மாவிற் கரைக்கவேண்டு
மெனக்கூறல்.

நெஞ்சகமேநானேநீநீயேநானென்றிருந்தும்
வஞ்சகமாவென்னைமறந்தனையே-தஞ்ச

முனக்குநானென்பதுவுமுண்மையேயுண்மை
யெனக்குநீவேறுயிராய். (எ௯)

இதுவுமது.

ஓடித்திரிந்தாயுழைத்தாய்பிழைத்தவழி
தேடிப்பலகலையுஞ்சிந்தித்தாய்-நாடியொரு
சற்குருவைத்தந்தாயென்சிந்தாய்தயவுசெய்த
நிற்குதவியென்செய்வேனே. (அ0)

இதுவுமது.

உன்னுருவாய்நானிருந்தவுண்மைபோலென்மனமே
யென்னுருவாய்நீவந்திசைந்தாயே-செய்ந்நன்றி
பாராட்டுவாருனைப்போலுண்டோபரமபதச்
சீராட்டின்மாறுதிரு. (அக)

இதுவுமது.

ஆசைவர்க்கமெல்லாமகற்றிப்பொறைமுதலாந்
தாசவர்க்கஞ்செய்யநலந்தந்தனையே-நேசத்தா
லாதிகாலந்தொடுத்தென்னன்புவிடாநெஞ்சேநன்
னீதியாலென்போலநில். (அஉ)

இவற்றுண்மனமடங்குமோவெனின், அனுபவத்
திலசையாமனிறுத்த, அஃதததனுலறிவாக
விளங்கிநிற்கு மெனக்கூறல்.

என்னெஞ்சமூருலவயானுமதுபோலிருந்து
வின்னெஞ்சமமாகாவிட்டேனே-யென்னெஞ்ச

**மென்போலசையா திருக்கவதுபோல்யானும்**
**பொன்போலிருந்தேன் பொலிந்து.** (அங)

*இவ்வனுபவத்தில்விருப்புவெறுப்பில்லையோ*
*வெனில், அனைத்துந்தானாயிருத்தலின் இவையின்*
*றெனக்கூறல்.*

**ஏதுவரவேண்டுமதுவருகவென்னைவிடுத்**
**தேதகலவேண்டுமதுவகல்க-கோதென்று**
**பிச்சையுந்தள்ளேன்பிரயபதமும்வேண்டே**
**னெச்செயலுநானாகினேன்.** (அச)

*இவ்வனுபவி தெய்வத்தைத் தொழுவானோ*
*வெனின், யாவுந்தன்னுருவமாகக்கண்டு*
*வணங்குதலன்றி, வேறு வணக்க*
*மின்றெனக்கூறல்.*

**எங்கேநான்போற்றுவதுமென்னையேதேவதையென்**
**றெங்கேதொழுவதுநானென்னையே-யெங்கே**
**யிருந்துகிடந்தோடுவதுமென்னிடத்தேநானே**
**யருந்துவதுங்கொள்வானுமாம்.** (அரு)

*அறிஞர்க்கெல்லா மிவ்வனுபவந் தானோவெனின்,*
*இச் சுவானுபவத்தைத்தவிர வேறொன்*
*றின்றெனக்கூறல்.*

**தன்னிடத்திலேதோற்றித்தன்னிடத்திலேயிருந்து**
**தன்னிடத்தேகூடுஞ்சகத்தெல்லாந்-தன்னைவிட**

வேறன்றெனக்காண்பரல்லாலிவ்வீடுபெற்ருேர்
மாறென்றுகாண்பரோமற்று. (அகூ)

ஆனுலிவர்களிடத்து ராகத்துவேஷமுண்டா
மோவெனில்,அனைத்துந் தாமாயிருப்பவ
ராதலின் அவர்களிடத்தவை யுண்டா
காவெனக்கூறல்.

ஏதுக்காசைப்படுவரேதுக்ககங்கரிப்பா
ரேதுக்குமாச்சரியமெய்துவா-ரேதுக்குந்
தாமேசராசரமாய்த்தாணுவாயேழ்புவிக்கு
மாமேருவொத்துவாழ்வார். (அஎ)

ஆனுலிவ்வனுபவந்தவறுதோவெனில், ஈஸ்வர
சிருஷ்டிகள்பேதித்தாலு மிதுபேதியா
தெனக்கூறல்.

மாதிக்குமாறிமதிகருகித்தீகுளிர்ந்திவ்
வாதித்தன்றெற்குவடக்காணுஞ்-சோதித்து
முன்னிலைமையாராய்ந்தமுத்தரேயெஞ்ஞான்றுந்
தன்னிலைமைகுன்றுதவர். (அஅ)

இவ்வனுபவிகளையறிகின்ற தெங்ஙனமெனின்,
நலந்தீங்குகளிற்சலியாதிருப்பதேகுறி
யாகக்கொண்டறிதல்வேண்டு
மெனக்கூறல்.

பிச்சைமுதலாய்ப்பிரமபதமீறாக
விச்சைவரினுமிசைந்தாலுஞ்-சொச்ச
நலங்காதார்தாமதுவாய் நாடாதார்சித்தங்
கலங்காதாரேஞானிகாண். (அகூ)

ஆனவிவர் துதி நிந்தைகளை யெண்ணு
ரோவெனில், எண்ணாரெனக் கூறல்.

வந்தித்துரைப்பார்வழிபடினும்வன்கணார்
நிந்தித்துரைத்தாலுநெஞ்சுறார்-சிந்தையற்று
மேகாடவிவரினும்வெய்யோனுதித்தாலு
மாகாயம்போல்வாரவர். (கூ0)

இவ்வனுபவிக்குணவுயாதெனின், நேரிட்
டதேயுணவாமெனக்கூறல்.

எங்கெந்தப்போகமெதிராகுமவ்வளவுக்
கந்தந்தப்போகமனுசரிப்பார்-பந்தமற்று
நீதித்தனிநிலையேநிற்பர்கிரணம்பரவு
மாதித்தன்போலேயவர். (கூக)

இவ்வனுபவியைக் காமாதிச் செருக்கு
தொடாரா தென்னெனின், வாச
னாக்ஷயம்வந்தபடியால் அவை
வாராதெனக் கூறல்.

சித்துருவமாகிச்செகசாட்சிதாமான
முத்தரைக்காமாதிமுனியாவே-சித்தத்தி

விகற்பவாசனையெல்லாமெடுத்தருந்திச்
சங்கற்பமில்லாத தால். (கூஉ)

இவ்வனுபவிக்கும் ஸ்தல்முதலியவைகள்வேண்
டாவோவென்னில், அவர்களிருப்பிடமுதலி
யனவேயனைகளா மெனக்கூறல்.

எங்கும்பொதுவாயிருக்குமொரு சீவன்முத்தர்
தங்குமிடந்தானே தலவாசம்-மங்கவர்கள்
பார்வையே தீர்த்தமவர் பாதாரவிந்தமலர்ச்
சேவையே சாயுச்சியம். (கூ௩)

ஞானிகளின்செயல் யாதென்னின், மெத
தென்றசொன முதலியனவா
மெனக்கூறல்.

மெத்தென்றசொல்லும் விருப்பமற்றநோக்குமெலா
சத்தென்றநெஞ்சுந்தளர்நடையுஞ்-சித்தத் [ஞ்
தடங்காமகிழ்வுமனவாக்கும்பெறற்
கிடந்தானே ஞானிசெயல். (கூச)

அறிஞர்கள்சிந்தனையாதெனில், எல்லாந்தானு
கச்சிந்தித்திருப்பதே யெனக்கூறல்.

எல்லாவிடத்துமெமைக்கண்டோமெம்மிடத்தி
லெல்லாமுங்கண்டோமென்றேகமாய்க்-கல்லாமை
கற்றவனுபூதிகைகண்டார்மற்றேது
மற்றார்சீவன்முத்தராம் (கூரு)

அறிஞர்க்கு விதிநிஷேதம் யாதெனின், அவர்கள்
தொடுத்ததுவிதியும்,விடுத்ததுநிஷேத
முமாமெனக் கூறல்.

தானேகனாகியுபசாந்தனாய்நின்மலனாய்
வானோமுதற்றன்வடிவாகு-ஞானி
விடுந்ததொழிலெல்லாம்விலக்காகுமன்றே
னெடுத்ததொழிலாசாரமாம். (௬௬)

அறிஞர்க்காசாரம்பூசையாவையெனின்,ஞானனு
சந்தானமுதலியவைகளாமெனக் கூறல்.

ஞானனுசந்தானஞானிக்குநீராட
லுனுகந்தகோலஞ்சதாசார-மானமற
வாங்கிப்புசிப்பதுவேமாபூசைசஞ்சாரந்
தீங்கற்றசுத்தசமாதி. (௬௭)

அறிஞர்க்குச்செய்காரியந்தவிர்காரியம் வேண்டா
மோவெனில்,சிவாகாரமாய்விளங்குகின்றவர்க்
கவையிலவாமெனக் கூறல்.

அண்டமெலாந்தானயறிவுவடிவாகக்
கண்டபரானந்தசிவாகாரருக்குத்-தண்டித்துத்
தள்ளும்பொருளேதுதள்ளாவிதிவழியே
கொள்ளும்பொருளேதுவாகும். (௬௮)

அறிஞர்நடையைநிந்திப்பவர்க்குக்கதியாதெ
னில்,பவநரகமெனக் கூறல்.

பெற்றபேரின்பப்பெரியோர்சரித்திரத்தைக்
குற்றமென்றாடுங்கொடியோர்கள்-பற்றறுக்

கோசாகாரப்புழுப்போற்கோடானுகோடிசென்ம
மாசார்வரென்றேமதி. (௯௯)

அறிஞரைத் துதித்தவர்க்குப் பலம்யாதெனில்,
அத்துவித ஸ்வரூபமாதலெனக்கூறல்.

சித்தநிராகாரநின்மலானந்தமய
சுத்தபரிபூரணசொரூப-வத்துவித
மெல்லாமுந்தாமாயிருப்பார்கருணைபெற
வல்லாரவராகுவார். (௧௦௦)

ஞானிகளெப்படிவிளங்குவார்களெனில், சர்வ
முந் தாமாகிச் சர்வமன்றாகிவிளங்கு
வாரெனக் கூறல்.

உள்ளமற்றாருள்ளத்துறுபொருளற்றாருள்ளக்
கள்ளமற்றார்ஞானக்கரையற்றார்-தெள்ளமுதச்
சிற்பரமுமற்றார்சிவானுபவந்தானுமற்றார்
கற்பனையுமற்றார்கள்காண். (௧௦௧)

இந்நூற்பயன் கூறல்.

பருவசாரத்தாற்பலிக்குமனுபூதிச்
சொருபசாரத்தின்சுவையை-யிருசெவியா
லுண்டிருக்கவல்லாருலகமெல்லாந்தாமாகக்
கண்டிருக்கவல்லார்கள் காண். (௧௦௨)

## சொரூபசாரம் முற்றுப்பெற்றது.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

## விசேஷ அறிவிப்பு.

### திருமங்கலியதாரணவிதி.

இதில் இந்துக்கள் அனைவரும் அத்தியாவசியம் கவ
கற்பாலனவாகிய அநேகவிஷயங்கள் வேதநூற் பிரமா
த்தோடு எழுதப்பட்டிருக்கின்றது.

பிரதி 1 - க்கு விலை பை மூன்று.

10 - க்குத் தபாற்கூலி அணா அரை.

ஒரேமுறையில் 10 - புத்தகங்கள் வாங்குவோர்க்கு
றும், 25 - க்கு 3ம்; 50 - க்கு 7ம்; 100 - க்கு 15ம்; 500
100ம்; கமீஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் அடியிற்கையொப்பமிட்டவரிடம் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதராஸ்
ரிப்பன்பிரெஸ்,
316, தம்புசெட்டிவீதி

இங்ஙனம்,
சை. ர. நமசிவாயசெட்டிய
*Proprietor U. B. R. Series &*

## NOW READY FOR SALE.

### மனமோகனராஜன் சரித்திரம்.

பிரதி 1 - க்கு அணா ஒன்று.

தபாற்கூலி 4 - க்கு அணா அரை.

---

### ஞானரத்நாவளி.

பிரதி காப்பி ௧-க்கு அணா ஒன்று.

தபாற்கூலி அணா அரை.

இதில் இந்துமத உண்மைகள் செவ்வனே விளக்கப்ப
ருக்கின்றன.